**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.25/2018**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : அர்ஜுனன் | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**02.12.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 19.10.1974ம் தேதியிட்டு லட்சுமியம்மாளுக்கு சீனிவாச பிள்ளை எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.06.2007ம் தேதியிட்டு கன்னியம்மாள் வகையறா குமாரி அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 15.10.2009ம் தேதியிட்டு முனுசாமி வகையறா பாலசுப்பிரமணி அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. குப்பன் அவர்களது வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்கிறேன். **(வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1427ம் பசலிக்கான அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.

**(அடங்கல் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** செட்டில்மெண்ட் அ பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் அ பதிவேடு வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)